**<u>12.10.2023 அ.வ.எண்.165/2008 பி.வா.சா.1 சின்னக்கண்ணு, க/பெ.கண்ண கவுண்டர் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பி.வா.த.சா.ஆ.5ல் நான் மருதாடு கிராமத்தில் வசிப்பதாக சொல்லப்பட்டிருந்தாலும் தெரு பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும் நான் மருதாடு கிராமத்தில் வசிக்கவில்லை என்பதால் தான் தெரு பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. அந்த ஆவணத்தில் வழக்கு சொத்துக்கு ருக்மணி அம்மாள் பெயரில் கூட்டுப்பட்டா இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்பதுசரிதான். அந்த கூட்டுப்பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் இல்லை. நான் தாக்கல் செய்த பி.வா.த.சா.ஆ.6ல் ருக்மணி அம்மாள் பெயர் இல்லை என்பது சரிதான். பி.வா.த.சா.ஆ.6ல் எவ்வளவு நிலத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. அந்த பட்டாவில் சாய்கிருஷ்ணனிடம் கிரையம் பெற்றவர்கள் என நான் சொல்லும் நபர்கள் பெயர் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.த.சா.ஆ.8ல் உள்ள ரசீதுகளில் பல என் பெயரில் இல்லை என்பதும், ஒரு கண்ணன் என்பவரது பெயரில் உள்ளன என்பதும் சரிதான். என் கணவர் கண்ணன் பெயரில் உள்ள வேறு சொத்துக்கான ரசீதை பி.வா.த.சா.ஆ.8ல் இணைத்துள்ளேன் என்பது சரியல்ல. பி.வா.த.சா.ஆ.9 மற்றும் 10திலும் உள்ள ரசீதுகள் என் கணவர் பெயரில் உள்ளன என்பது சரிதான். பி.வா.த.சா.ஆ.11ல் நானும் என் கணவரும் என் பிள்ளைகளும் சேர்ந்து கடன் பெற்றதை போல குறிப்பு உள்ளது என்பது சரிதான். அந்த ஆவணத்திலும் சொத்து சொசைட்டி தெருவில் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம் குறிப்பிடப்படவில்லை. வழக்கு சொத்து மேல்மருவத்தூர் ரோட்டில் இருப்பதாகவும் பள்ளத்தெருவில் இருப்பதாகவும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அவற்றில் எது சரியானது என்றும் கேட்டால் வழக்கு சொத்து சொசைட்டி தெருவில் உள்ளது. சொசைட்டி தெருவில் வழக்கு சொத்து உள்ளதாக ஆவணம் ஏதும் இல்லை என்றும் என் கணவர் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. வழக்கு சொத்திற்கு வடக்கில் உள்ள செளரிராஜ் இடத்திற்கும் வடக்கில் உள்ள இடம் யாருடையது எனக் கேட்டால் அது எனக்கு தெரியாது. சாய்கிருஷ்ணனுக்கும் அவரது சகோதரிகளுக்கும் இடையே ஏற்கனவே ஒரு வழக்கு நடந்து அதில் சொத்துக்கள் சாய்கிருஷ்ணனுக்குதான் சொந்தம் என் தீர்ப்பாகி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாய்கிருஷ்ணனின் சகோதரி பாலசரஸ்வதியை எனக்கு தெரியும். அவருக்கு சொத்தில் உரிமை இல்லையா எனக் கேட்டால் அவரும் சாய்கிருஷ்ணனும் சேர்ந்துதான் எனக்கு சொத்து கொடுத்தார்கள். அத்தகைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். ருக்மணி அம்மாள் சாய்கிருஷ்ணனிடம் இருந்து மட்டும்தான் கிரையம் பெற்றார். ராம ஐயர் என்பவர் எனக்கு யார் எனத் தெரியாது. அவர் பெயரிலும் பி.வா.த.சா.ஆ.6 கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.த.சா.ஆ.2 சொத்து விவரத்தில் சொத்து பொதுத் தெருவில் இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி என் கணவரைத்தான் கேட்க வேண்டும்.

பி.வா.த.சா.ஆ.11க்கு எனக்கு வேண்டியவர்களை சாட்சியாக வைத்து அந்த ஆவணத்தை உருவாக்கியுள்ளேன் என்பது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்னால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்றால் அதுசரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**